தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement -18 ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.

All the Best!!!

**1)** பொருந்தாதது எது?

A) பெருஞ்சித்திரனார் - துரை.மாணிக்கம்
B) தமிழழகனார் - சண்முகசுந்தரம்
C) எழில்முதல்வன் - மா.இராமலிங்கம்
D) வண்ணதாசன் - இராதாகிருஷ்ணன்

**2)** பொருத்துக:

1. சந்தக்கவிமணி - அ) இரா. இளங்குமாரனார்
2. தமிழ்த்திரு - ஆ) பெருஞ்சித்திரனார்
3. மொழிஞாயிறு - இ) க.அப்பாதுரையார்
4. பாவலரேறு - ஈ) தமிழழகனார்
5. பன்மொழிப்புலவர் - உ) தேவநேயப் பாவாணர்

A) 1-ஈ, 2-உ, 3-அ, 4-ஆ, 5-இ
B) 1-ஈ, 2-அ, 3-உ, 4-ஆ, 5-இ
C) 1-உ, 2-ஈ, 3-அ, 4-ஆ, 5-இ
D) 1-அ, 2-உ, 3-ஈ, 4-ஆ, 5-இ

**3)** இசைநிறை அளபெடை என்று அழைக்கப்படுவது?

A) இன்னிசை அளபெடை
B) சொல்லிசை அளபெடை
C) செய்யுளிசை அளபெடை
D) ஒற்றளபெடை

**4)** பின்வரும் வாக்கியங்களில் சரியானவை எவை?

1. உலகம் ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்றவர் இளங்கோவடிகள் ஆவார்
2. மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்றார் தொல்காப்பியர்
3. வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் / ஆயுள் பெருக்கம்உண் டாம் என்றார் சங்க ஔவையார்

A) 1 & 2
B) 2 & 3
C) 1 & 3
D) மேற்கண்ட எதுவுமில்லை

**5)** பின்வரும் எப்புகழுக்கு பாரதியார் சொந்தமில்லை?

A) ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்று அழைக்கப்படும் வசனகவிதையை தமிழில் அறிமுகப்படுத்தியவர்
B) கார்டூன், கேலிப்படங்களை தமிழுக்கு அறிமுகப்படுத்டியவர்
C) வில்லியம் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்
D) தமிழில் புதுக்கவிதை என்ற வடிவம் தோன்றக் காரணமாய் இருந்தவர்

**6)** சாரைப்பாம்பு - இலக்கணக் குறிப்பு தருக:

A) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
B) பொருளாகுபெயர்
C) வினைத்தொகை
D) வினையாலனையும் பெயர்

ETW ACADEMY

**7)** முல்லைப்பாட்டைப் பற்றிய தவறான செய்தி எது?

A) பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல்

B) முல்லைப்பாட்டு 108 அடிகளைக் கொண்டது

C) முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது

D) முல்லைப்பட்டை இயற்றியவர் காவிரிப்பூம்பட்டினத்து பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்

**8)** பினவரும் வாக்குயங்களில் ஒன்று மட்டும் தவறு. அது எது?

A) "விருந்தே புதுமை" என கூறியவர் திருவள்ளுவர்

B) "............... தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" எனும் வரி இடம்பெற்ற நூல் - சிலப்பதிகாரம்

C) "பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் / வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் / விருந்தும் அன்றி விளைவன யாவையே" என்ற அடிகள் இடம்பெறும் நூல் கம்பராமாயணம்

D) "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" - என்று விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியவர் செயங்கொண்டார்

**9)** பாண்டியன் மகளே! என்று தமிழை வாழ்த்திப் பாடியவர் யார்?

A) தமிழழகனார

B) பாரதியார்

C) பலபட்டைச் சொக்கநாதப் புலவர்

D) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**10)** பொருத்துக

(i) கிழக்கு - அ) குணக்கு (கெண்டல்)

(ii) மேற்கு - ஆ) குடக்கு (கோடை)

(iii) வடக்கு - இ) வாடை

(iv) தெற்கு - ஈ) தென்றல்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | ஈ | இ | ஆ | அ |
| C) | அ | ஆ | ஈ | இ |
| D) | ஆ | அ | ஈ | இ |

**11)** 'இலா' (ELA - Electronic Live Assistance) என்ற, ஒரு வினாடிக்கு பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும் "உரையாடு மென்பொருளை (Chatbot) " உருவாக்கியிருக்கும் இந்திய வங்கி எது?

A) கனாரா வங்கி

B) பாரத ஸ்டேட் வங்கி

C) இந்திய மைய வங்கி

D) இந்தியன் வங்கி

**12)** "ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி / பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன." என்று கூறும் நூல் எது?

A) தண்டியலங்காரம்

B) நன்னூல்

C) தொல்காப்பியம்

D) யாப்பெருங்கலக் காரியை

ETW ACADEMY

**13)** கேட்ட பாடல் - எவ்வகைத் தொடர் ஆகும்?

A) பெயரெச்சத் தொடர்
B) வினையெச்சத் தொடர்
C) பயனிலைத் தொடர்
D) எழுவாய்த் தொடர்

**14)** "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" என்று குறிப்பிடும் நூல்?

A) நற்றிணை
B) பொருநராற்றுப்படை
C) புறநானூறு
D) சிலப்பதிகாரம்

**15)** பெருஞ்சித்திரனார் பற்றிய செய்திகளில் தவறானது எது?

A) உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப்பறவைகள் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்
B) பெருஞ்சித்திரனாரின் தொல்காப்பிய மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாக அமைந்தது
C) தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களின் மூலமாக தமிழ்ப்பணியாற்றினார்
D) இவர் இயற்றிய கனிச்சாறு 8 தொகுதிகளாக வந்தது.

**16)** அன்றாட வாழ்வில் அறிவியல் - என்ற நூலின் ஆசிரியர்?

A) ஸ்டீபன் ஹாக்கிங்
B) மனுஷ்யபுத்திரன்
C) ச.தமிழ்ச்செல்வன்
D) சுஜாதா (எ) ரங்கராஜன்

**17)** பொருந்தாப் பொருள் எது?

A) துய்ப்பது - கற்பது
B) மேவலால் - பெறுதல்
C) நசை - அறுவருப்பு
D) வேங்கை - மரம்

**18)** வேலொடு நின்றான் இடுவேன் றதுபோலும்... என்றக் குறளில் பயின்றுவரும் அணி?

A) உவமையணி
B) உருவக அணி
C) வஞ்சப் புகழ்ச்சியணி
D) எடுத்துக்காட்டு உவமையணி

**19)** "நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன் இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக் கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்..." என்ற பாடலடிகள் இடம்பெறும் நூல்?

A) அகநானூறு
B) சிலப்பதிகாரம்
C) கலித்தொகை
D) புறநானூறு

**20)** கேடு, சூடு ஆகிய சொற்களின் இலக்கணம்?

A) முதனிலைத் தொழிற்பெயர்
B) விகுதிபெற்றத் தொழிற்பெயர்
C) விகுதி பெறாத தொழிற்பெயர்
D) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**21)** "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் / மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால் / மீளாத் துயர்த்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ / ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே" - என்ற பாடல் இடம்பெறும் பாசுரம்?

A) நாச்சியார் திருமொழி
B) திருப்பாவை
C) திருவெம்பாவை
D) பெருமாள் திருமொழி

ETW ACADEMY

**22)** செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் மற்றும் உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர். அவர் யார்?

A) தமிழழகனார் B) இரா. இளங்குமாரனார்

C) தேவநேயப் பாவாணர் D) க.அப்பாதுரையார்

**23)** பின்வரும் கூற்றுகளில் எவை தவறானது(வை)?

1. வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் - என்று பாடியவர் இளங்கோ
2. "நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற் / செந்தமிழின் பின்னுதித்த தென்றலே" எனப் பாடியவர் சொக்கநாதன்
3. "நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே" என்று பாடியவர் கண்ணதாசன்

A) 1 & 2 B) 1 மட்டும்

C) 2 & 3 D) மேற்கண்ட எதுவுமில்லை

**24)** "நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி / வளிதொழில் ஆண்ட.." என்றப் பாடலில் வளி என்ற சொல் குறிப்பிடுவது எதை?

A) அழுகை B) வலிமை C) இழுத்தல் D) காற்று

**25)** “கைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து” - என்று குறிப்பிடும் நூல்?

A) முக்கூடர்பள்ளு B) மூவருலா

C) முத்தொள்ளாயிரம் D) தமிழ் விடு தூது

**26)** வழிபோக்கர்களுக்காக மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டது யாருடைய ஆட்சிக் காலங்களில்?

1. முகலாயர்கள்
2. நாயக்கர்கள்
3. சோழர்கள்
4. மராட்டியர்கள்

A) 1 & 4 B) 2 & 3 C) 1 & 2 D) 2 & 4

**27)** சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் என்று பாடியவர் யார்?

A) மணவை முஸ்தபா B) சச்சிதானந்தன்

C) வைக்கம் முகமது பஷீர் D) தேவதேவன்

**28)** குலசேகர ஆழ்வார் கேரளாவின் பாலக்காடு மாவட்டத்திலுள்ள வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் யாரை அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்?

A) வெங்கடேசப் பெருமாள்

B) உப்பிலியப்பன்

C) உய்யவந்தப் பெருமாள்

D) மெய்கண்டப் பெருமாள்

ETW ACADEMY

**29)** "ஒப்புடன் முகம் மலர்ந்தே / உபசரித்து உண்மை பேசி / உப்பிலாக் கூழ் இட்டாலும் / உண்பதே அமிர்தம் ஆகும் / முப்பழமொடு பால் அன்னம் முகம் கடுத்து இடுவாராயின் / கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகும் தானே" என்ற பாடல் இடம்பெறும் நூல்?

A) காசிக்காண்டம் B) நான்மணிக்கடிகை
C) சிறுபஞ்சமூலம் D) விவேகசிந்தாமணி

**30)** பெருமாள் திருமொழியில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன

A) 143 B) 108 C) 101 D) 105

**31)** விரிச்சி என்ற சொல்லின் பொருள் என்ன?

A) வலம்புரி சங்கு B) மலை C) நறுமணமுடைய மலர்கள் D) நற்சொல்

**32)** பின்வருபவர்களுள் காக்கைப்பாடினியத்திற்கு உரை எழுதியவர் யார்?

A) இரா.இளங்குமாரனார் B) பரிமேலழகர்
C) உ.வே.சாமிநாதர் D) தேவநேயப் பாவாணர்

**33)** பொருந்தாப் பொருள் எது?

A) ஊழி - யுகம் B) ஊழ் - முறை
C) தண்பெயல் - வெப்ப மழை D) பீடு - சிறப்பு

**34)** திருக்குறள் தெளிவுரை - என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) திரு.வி. கல்யாணசுந்தரனார் B) மு.வரதராசனார்
C) இரா.பி.சேதுப்பிள்ளை D) வ.உ.சிதம்பரனார்

**35)** "தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியவனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள" என்பவர் யார்?

A) கால்டுவெல் B) இளங்குமாரனார் C) பெருஞ்சித்திரனார் D) பாவாணர்

**36)** கி.பி. முதல் நூற்றாண்டில், பருவக் காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்த கிரேக்க மாலுமி யார்?

A) பெரிபிளஸ் B) தாலமி C) பாகியான் D) ஹிப்பாலஸ்

**37)** பொருந்தாத இலக்கணக் குறிப்பு எது?

A) ஊழ்ஊழ் - அடுக்குத்தொடர் B) செந்தீ - பண்புத்தொகை
C) வாரா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் D) வளர்வானம் - வினைத்தொகை

**38)** பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவு இல்லாதவர் எவர் என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) மனப்பாடம் செய்து படிப்பவர் B) உலகில் சமரசம் செய்து வாழாதவர்
C) உலகோடு ஒத்து வாழக் கல்லாதவர் D) உலகைத் திருத்தாதவர்

ETW ACADEMY

**39)** ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது?

A) தனிமொழி B) பொதுமொழி

C) தொடர்மொழி D) உலக வழக்கு மொழி

**40)** ஒரு விரலைக் காட்டிச் "சிறையதோ? பெரியதோ" என்று கேட்டல் - எவ்வழுவாகும்?

A) திணை வழு B) வழாநிலை

C) விடை வழு D) மேற்கண்ட அனைத்தும்

**41)** பின்வரும் வாக்கியங்களில் தவறானது?

A) சிறந்த அறக்கருத்துக்களை எடுத்துரைக்கும், "வெற்றி வேற்கை" என்ற நூலை எழுதியவர் அதிவீரராம பாண்டியர்

B) அதிவீரராம பாண்டியர் முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர்

C) அதிவீரராம பாண்டியரின் புனைப்பெயர் பொற்கைப் பாண்டியன்

D) நைடதம், லிங்கபுரானம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகிய நூல்களை அதிவீரராம பாண்டியர் எழுதியுள்ளர்

**42)** கஜா புயலின் பெயரை எந்த நாடு அளித்தது?

A) இந்தியா B) இந்தோனேசியா C) மொரீசியஸ் D) இலங்கை

**43)** 1300 ஆண்டுகளுக்கு முன்பே "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் ............. சிறிய ஆகப் பெரியோன் தெரியின்" எனும் வரிகளை இயற்றியவர் யார்?

A) மாணிக்கவாசகர் B) அப்பர் C) ஞானசம்பந்தர் D) சுந்தரர்

**44)** பினவரும் செய்திகளில் தவறானவை?

1. வளி மிகின் வலி இல்லை - என்ற புறநானூற்றுப் பாடலடிகளை இயற்றியவர் - கூடலூர்க் கிழார்

2. கடுங்காற்று, மணலைக் கொண்டுவந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றி புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளவர் மதுரை இளநாகனார்

3. உலகளவில் காற்றை மாசுபடுத்துதலில் இந்தியா வகிக்கும் இடம் முதலிடம்

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

**45)** நடை - என்பதன் இலக்கணம் என்ன?

A) முதனிலைத் தொழிற்பெயர் B) விகுதிபெற்றத் தொழிற்பெயர்

C) விகுதி பெறாத தொழிற்பெயர் D) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**46)** சங்க நூல்களுள் பண்ணொடு பாடப்பட்ட நூல்?

A) பதிற்றுப்பத்து B) பரிபாடல்

C) மலைபடுகடாம் D) நான்மணிக்கடிகை

ETW ACADEMY

47) யாரைத் துணைக்கொள்ளாத பாதுகாப்பற்ற மன்னன், பகைவர் இன்றியும் தானே கெடுவான் என்கிறார் வள்ளுவர்?

A) குற்றம் கண்டபோது இடித்துக் கூறும் பாதுகாப்பு வழங்கும் படைவீரர்

B) குற்றம் கண்டபோது இடித்துக் கூறும் சிறந்த போர் வீரரை

C) குற்றம் கண்டபோது இடித்துக் கூறும் பெரியோரை

D) மேற்கண்ட அனைத்தும்

48) "இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்" என்றத் தொடரில் வெளிப்படுவது ____ வழுவமைதி ஆகும்.

A) கால வழுவமைதி

B) பால் வழுவமைதி

C) இட வழுவமைதி

D) மரபு வழுவமைதி

49) பொருந்தாத இலக்கணக்குறிப்பு எது?

A) மூதூர் - பண்புத்தொகை

B) கைதொழுது - ஐந்தாம் வேற்றுமைத்தொகை

C) தடக்கை - உரிச்சொல் தொடர்

D) உறுதுயர் - வினைத்தொகை

50) "வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் / மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால் / மீளாத் துயர்த்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ / ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே" - என்ற பாடல் இடம்பெறும் பாசுரம்?

A) நாச்சியார் திருமொழி

B) பெருமாள் திருமொழி

C) பெரியாழ்வார் திருமொழி

D) மேற்கண்ட அனைத்தும்

51) பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம் எதைப் போன்றது என்கிறார் வள்ளுவர்?

A) ஊரின் நடுவே நச்சுமரம் பழுத்தது போன்றது

B) ஊரின் நடுவே ஊருணி ஊறியது போன்றது

C) ஊரின் நடுவே பழமரம் பழுத்தது போன்றது

D) ஊரின் நடுவே நல்கனி பழுத்தது போன்றது

52) குளோரோ புளுரோ கார்பனை வெளியிடும் குளிர் பதன சாதனங்களுக்கு மாற்றாக தற்போது பயன்படுத்தப்பட்டு வருபவை?

A) ஹைட்ரோ கார்பன் குளிர்பதனிகள்

B) கார்பன் இழை குளிர்பதனிகள்

C) சிங்கிள் லேயர் கார்பன் குளிர்பதனிகள்

D) கார்பன் ஐசோடோப்பு குளிர்பதனிகள்

53) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெருமாள் திருமொழி ____ திருமொழியாக உள்ளது

A) மூன்றாம்

B) எட்டாம்

C) இரண்டாம்

D) ஐந்தாம்

54) "கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில் / அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி / உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம் / இலையிலிட வெள்ளி எழும்" என்று பாடியவர்?

A) காளமேகப்புலவர

B) உவமைக் கவிஞர்

C) காளிதாசர்

D) கௌடில்யர்

ETW ACADEMY

**55)** உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழி தமிழே! - என்றவர் யார்?

A) தேவநேயப் பாவாணர் B) இரா. இளங்குமாரனார்

C) தனிநாயகம் அடிகள் D) க.அப்பாதுரையார்

**56)** "விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக் / கரு வளர் வானத்து இசையில் தோன்றி, உரு அறிவரா ஒன்றன் ஊழியும்; உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்..." என்றப் பாடல் இடம்பெறும் நூல்? இயற்றியவர்?

A) பரிபாடல், கீரந்தையார் B) பதிற்றுப்பத்து, கீரந்தையார்

C) பரிபாடல், மோசிகீரனார் D) பதிற்றுப்பத்து, மோசிகீரனார்

**57)** முற்றுப் பெறாதவினை, பெயர்ச்சொல்லைத் தொடர்வது

A) வினையெச்சத் தொடர் B) பெயரெச்சத் தொடர்

C) வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் D) மேற்கண்ட எதுவுமில்லை

**58)** "பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி" என்று நாமக்கல் மாவட்டத்தின் கொல்லிமலையைக் குறிப்பிடும் நூல்?

A) நற்றிணை B) ஐங்குறுநூறு C) சிலம்பு D) அகநானூறு

**59)** பரிபாடலின் 70 பாடல்களில், கிடைக்கப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை என்ன?

A) 70 B) 58 C) 24 D) 48

**60)** மலைபடுகடாமைப் பற்றிய செய்திகளில் தவறானது?

A) மலைபடுகடாம் கூத்தராற்றுப்படை என்று அழைக்கப்படுகிறது

B) இது 583 அடிகளால் ஆனது

C) இதன் பாட்டுடைத் தலைவன் கரிகால் சோழப் பெருவளத்தான்

D) இதனை இயற்றியவர் இரணியமுட்டத்து பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் ஆவார்

**61)** திருச்சிக்கு அருகில் உள்ள அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையை அமைத்தவர்?

A) தேவநேயப்பாவாணர் B) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

C) இரா.இளங்குமாரனார் D) திரு.வி.கல்யாண சுந்தரனார்

**62)** _____ பல்கலைக்கழகத்தில் நியூட்டன் வகித்த மதிப்புமிக்கப் பதவியான லூகாசியன் பேராசிரியர் ஹாக்கிங்கும் வகித்துள்ளார்?

A) அமெரிக்க கொலம்பியா B) அமெரிக்க கேம்பிரிட்ஜ்

C) ரஷ்ய மருத்துவக் கல்லூரி D) மேற்கண்ட எதுவுமில்லை

**63)** பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் எப்போது & எங்கு நிறுவப்பட்டது?

A) 1988, சென்னை அடையாறு B) 1986, சென்னை அடையாறு

C) 1988, சென்னை கிண்டி D) 1988, சென்னை பூபிருந்தவல்லி

**64)** பொம்மல் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) பள்ளம் B) நூல் C) கதிர் D) சோறு

**65)** முல்லைத் திணையின் பூக்களில் சேராதது?.

A) கொன்றை B) காயா C) தாழம்பூ D) குருந்தம்

**66)** தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் திருப்பாவை & திருவெம்பாவை பாடல்களைத் தாய் மொழியில் எழுதிவைத்துப் பாடுகின்றனர் என்று கூறுபவர்?

A) தனிநாயகம் அடிகள் B) பன்மொழிப் புலவர் க. அப்பாதுரையார்

C) சச்சிதானந்தம் D) குமரகுருபர்

**67)** வியர்வைமுத்துக்கள் என்ற சொல்லின் இலக்கணம்?

A) உவமை B) உருவகம்

C) ஏகதேச உருவக அணி D) உவமைத்தொகை

**68)** எழில் முதல்வன் தனது எந்த நூலுக்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார்?

A) இனிக்கும் நினைவுகள் B) எங்கெங்கு காணினும்

C) யாதுமாகி நின்றாய் D) புதிய உரைநடை

**69)** தொகைநிலத் தொடர் எத்தனை வகைபடும்?

A) 6 B) 9 C) 7 D) 8

**70)** தமிழ்த்தொண்டு - என்ற சொல்லின் இலக்கணம்?

A) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

B) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

C) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

D) முதலாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

**71)** தமிழழகனார் எத்தனை சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்?

A) 18 B) 24 C) 96 D) 12

**72)** கருந்துளை என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதன்முதலில் குறிப்பிட்ட அமெரிக்க அறிவியலாளர்?

A) ஸ்டீவன் ஹாக்கிங் B) ஜான் வீலர்

C) ஜான் கென்னடி D) பேராசிரியர் செஹேல்

**73)** கி.ராஜநாராயணனுக்கு முன்னர் எழுதத்துவங்கிய கரிசல் எழுத்தாளர் யார்?

A) சு.சமுத்திரம் B) கு.அழகிரிசாமி C) வேல ராமமூர்த்தி D) தஞ்சை பிரகாஷ்

**74)** புயலிலே ஒரு தோணி என்ற தமிழ் செவ்வியல் புதினத்தை இயற்றியவர் யார்?

A) நா. வானமாமலை B) ப. செயப்பிரகாசம் C) பிரமிள் D) ப. சிங்காரம்

**75)** தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. விதிதான் தீர்மானிக்கிறது என்றால் சாலையைக் கடக்கும்போது ஏன் இருபுறமும் பார்த்துக் கடக்கிறார்கள்? என்று கேட்டவர் யார்?

A) ஐசக் நியூட்டன் B) ஐன்ஸ்டைன் C) ஹாக்கிங் D) டெஸ்லா

ETW ACADEMY

76) கி.ராஜநாராயணனின் கோபல்லபுரத்து மக்கள் என்ற புதினத்திற்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்ட ஆண்டு?

A) 1991 B) 1986 C) 1997 D) 1995

77) நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா என்று போற்றப்பட்டவர்?

A) பாரதியார்
B) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
C) பலபட்டை சொக்கநாதப் புலவர்
D) ஒட்டக்கூத்தர்

78) இரா.இளங்குமாரனாரின் நூல் அல்லாதது எது?

A) சொல்லாய்வுக் கட்டுரைகள்
B) இலக்கண வரலாறு
C) தனித்தமிழ் இயக்கம்
D) யாப்பெருங்கலம் உரை

79) "கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை / திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை" என்ற அடிகளில் கரூர் மாவட்டத்தின் கருவூரைக் குறிப்பிடும் நூல் எது?

A) சிலம்பு B) அகநானூறு C) ஐங்குறுநூறு D) பதிற்றுப்பத்து

80) "ஒப்புடன் முகம் மலர்ந்தே / உபசரித்து உண்மை பேசி / உப்பிலாக் கூழ் இட்டாலும் / உண்பதே அமிர்தம் ஆகும் / முப்பழமொடு பால் அன்னம் முகம் கடுத்து இடுவாராயின் / கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகும் தானே" என்ற பாடல் இடம்பெறும் நூல்?

A) ஏலாதி
B) நாலடியார்
C) நைடதம்
D) விவேகசிந்தாமணி

81) பொருந்தாதது எது?

A) உறாஅர்க்கு - இசைநிறை அளபெடை
B) கெடுப்பதூஉம் - இன்னிசை அளபெடை
C) உரனசைஇ - செய்யுளிசை அளபெடை
D) ஏதுமில்லை

82) சீனாவில் உள்ள சிவன் கோயிலில் ______ கால சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

A) சோழர் கால
B) பல்லவர் கால
C) சாளுக்கியர் கால
D) ராட்டிரகூர் சார்பாக

83) "வாடா இராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது ____ வழுவமைதி ஆகும்

A) பால் வழுவமைதி
B) இட வழுவமைதி
C) திணை வழுவமைதி
D) மரபு வழுவமைதி

84) "வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும் / மாவும் பலாவும் சூழ்அடுத்து ஓங்கி / தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்" என்ற அடிகள் இடம்பெறும் நூல் எது?

A) அகநானூறு B) புறநானூறு C) ஐங்குறுநூறு D) சிலப்பதிகாரம்

85) பாரதியார் குழந்தைகளுக்காக படைத்த அறிவுரைகளின் தொகுப்பு?

A) புதிய ஆத்திச்சூடி
B) கண்ணன் பாட்டு
C) பாப்பா பாட்டு
D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**86)** பொருந்தாதது எது?

A) அன்புச்செல்வன் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை B) முறுக்கு மீசை வந்தார் - அன்மொழித்தொகை

C) தொடுதிரை - வினைத்தொகை D) மேற்கண்ட எதுவுமில்லை

**87)** கரிசல் இலக்கிய வழிவந்தோரில் சேராதவர்?

A) பா.செயப்பிரகாசம் B) கோடங்கி C) பூமணி D) சோ. தர்மன்

**88)** குலசேகராழ்வாரின் காலம்?

A) கி.பி. 8ஆம் நூற்றாண்டு B) கி.பி. 6ஆம் நூற்றாண்டு

C) கி.பி. 12ஆம் நூற்றாண்டு D) கி.பி. 15ஆம் நூற்றாண்டு

**89)** மாஅல் - இலக்கணக் குறிப்பு தருக

A) அன்மொழித்தொகை B) உரிச்சொல்தொடர்

C) பண்புத்தொகை D) வினைத்தொகை

**90)** பாச்சல் என்ற வட்டார வழக்குச் சொல்லின் பொருள் என்ன?

A) பாய்ச்சல் B) பாசம் C) பாசி D) பாத்தி

**91)** இந்தியாவிலேயே முதன்முதலாக ____ டிகிரி பாகை அரைவட்ட வானத்திரை பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் கோளரங்கத்தில் உள்ளது.

A) 360 B) 80 C) 45 D) 270

**92)** கி.ரா உருவாக்கிய அகராதி எது?

A) தமிழ் - வடசொல் இணை அகராதி B) வடசொல் - கரிசல் இணை அகராதி

C) கரிசல் வட்டாரச் சொல்லகராதி D) ஆங்கில - தமிழ் வட்டாரச் சொல்லகராதி

**93)** "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்" - என்றவர் யார்?

A) தொல்காப்பியர் B) பவணந்தி முனிவர் C) தண்டி D) அமுதசாகரர்

**94)** பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்களில் சேராதது?

A) இந்தியா B) மணிக்கொடி

C) சுதேசமித்திரன் D) மேற்கண்ட அனைத்தும்

**95)** 1924இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்த அமெரிக்க வானியல் வல்லுநர் யார்?

A) ஆரியபட்டா B) விக்ரம் சாராபாய் C) எட்வின் ஹப்பிள் D) ஐன்ஸ்டைன்

**96)** சோர்வில்லாது முயற்சி செய்வோர், செய்கின்ற செயலுக்கு இடையூறாக வரும் ____ஐயும் தோற்கடித்து வெற்றியடைவர் என்கிறார் வள்ளுவர்

A) சோமபலை B) முன்வினையை

C) காதலை D) கண்ணயற்சியை

ETW ACADEMY

**97)** உண்டார் என்ற வினைமுற்றை வினையாலனையும் பெயராக மாற்றுக.

A) உண்டவர் B) உண்ணுதல் C) உண் D) உண்ணல்

**98)** "கறங்கு இசை விழவின் உறந்தை" என்றத் தொடரின் மூலம் உறையூரைக் குறிப்பிடும் நூல் எது?

A) சிலப்பதிகாரம் B) அகநானூறு C) புறநானூறு D) ஐங்குறுநேறு

**99)** அரிய மலர் - இலக்கணக் குறிப்புத் தருக.

A) குறிப்புப் பெயரெச்சம் B) தெரிநிலை பெயரெச்சம்

C) குறிப்பு வினையெச்சம் D) தெரிநிலை வினையெச்சம்

**100)** தமிழில் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட கார்டிலா என்னும் நூல் _____ வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது. மற்றும் அந்நூல் எந்த இரு வண்ணங்களில் மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது?

A) ரோமன் - நீலம் & சிவப்பு B) சென்ச்சூரியன் - கருப்பு & நீலம்

C) ரோமன் - கருப்பு & சிவப்பு D) சென்ச்சூரியன் - கருப்பு & சிவப்பு

**101)** பின்வரும் கூற்றுகளில் எவை சரி?

1. முன்வேதகால மூத்தோர் சபை சபா எனப்பட்டது
2. முன்வேதகாலத்தில் ஆண் பெண் இருபாலரும் முக்கியத்துவம் பெற்றிருந்த சபை சமிதி
3. முன்வேதகாலத்தில் பொதுமக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சபை சமிதி
4. முன்வேதகாலத்தில் ஆட்சி நிர்வாகத்தின் அதிகாரமையமாகத் திகழ்ந்த சபை விதாதா

A) 1 & 3 B) 1, 2 & 3 C) 2 & 4 D) 1, 3 & 4

**102)** சரியாகப் பொருந்தியுள்ள இணை எது?

A) தனுர்வேதம் - நுண்கலை B) காந்தர்வவேதம் - போர்க்கலை

C) கட்டடக்கலை - சில்பவேதம் D) மேற்கண்ட எதுவுமில்லை

**103)** உபநிடதம் (உபநிஷத்) என்ற சொல்லிற்கு என்ன பொருள்?

A) வேதம் ஓதுதல் B) வேதம் கற்றல்

C) அருகில் அமர்தல் D) வேதம் போதித்தல்

**104)** பின்வரும் வாக்கியங்களில் தவறானவை எவை?

I) இந்து, சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய மூன்று சமயங்களும் கர்மாவை ஏற்கின்றன

II) சமணம் கடவுள் கொள்கை அவசியம் என்று கருதுகிறது

III) வீடுபேறு அடைய திரிபீடகங்களை கடைபிடிக்க வேண்டும் என்று சமணம் கூறுகிறது

IV) புத்தர், கடவுள், உயிர், சடங்கு ஆகியவற்றைப் பற்றி வரையறுத்துக் கூறினார்

V) புத்தர் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டிருந்தார்

A) I, III & V
B) II, III, IV & V
C) I, IV & V
D) II, III & IV

ETW ACADEMY

105) குருத்வாரா என்பதன் பொருள் என்ன?

A) குருவை அடையும் வழி B) குருவின் கோயில் C) குரு காட்டும் வழி D) குருவின் சொல்

106) சமண சமய நூல்களான 12 அங்கங்கள் மற்றும் 12 உபஅங்கங்கள் ஆகியவை இறுதி செய்யப்பட்ட மாநாடு எது?

A) முதல் சமண சமய மாநாடு
B) இரண்டாவது சமண சமய மாநாடு
C) மூன்றாவது சமண சமய மாநாடு
D) நான்காவது சமண சமய மாநாடு

107) பாகியான் மூன்று ஆண்டுகள் எங்கு தங்கி சமஸ்கிருத மொழியையும் பௌத்த இலக்கியங்களையும் கற்றார்?

A) ஆக்ரா B) பாடலிபுத்திரம் C) காஞ்சிபுரம் D) காசி

108) குடவோலை முறை பற்றி குறிப்பிடும் கல்வெட்டு யாருடைய காலத்தில் பொறிக்கப்பட்டது?

A) விஜயாலயன்
B) முதலாம் பராந்தகன்
C) சுந்தர சோழன்
D) இராஜராஜ சோழன்

109) பாண்டிய நாட்டில் பின்வரும் எந்த வியாபாரம் மிகச் சிறப்பாக நடைபெற்றதாக மார்க்கோபோலோ மற்றும் வாசிப் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்?

A) குதிரை வியாபாரம்
B) அடிமைகள் வியாபாரம்
C) முத்து வியாபாரம்
D) மிளகு வியாபாரம்

110) 1920, அக்டோபரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எங்கு துவங்கப்பட்டது?

A) உக்ரைனின் கார்கிவ்வில்
B) சீனாவின் பீஜிங்கில்
C) உஸ்பெக்கிஸ்தானின் தாஷ்கண்டில்
D) இந்தியாவின் வங்காள மாகாணத்தில்

111) பகத்சிங் எவ்வமைப்பைச் சேர்ந்தவர்?

A) இந்திய குடியரசு இராணுவம்
B) இந்துஸ்தான் புரட்சிகர சோசலிசக் கூட்டமைப்பு
C) வங்காள சோசலிசக் கூட்டமைப்பு
D) இந்துஸ்தான் புரட்சிகர இராணுவம்

112) எந்த ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பகத்சிங் மற்றும் ராஜகுருவின் வழக்கையும் சேர்க்க வேண்டும் என்று விரிவான கோரிக்கை எழுந்தது?

A) காந்தி - மவுண்ட்பேட்டன்
B) காந்தி - சைமன்
C) காந்தி - இர்வின்
D) காந்தி - ரிப்பன்

113) சிங்காரவேலர், முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடிய ஆண்டு எது?

A) 1921 B) 1922 C) 1923 D) 1924

114) ஆரிய சமாஜத்தின் மூலமே அரசியலில் இந்து மறுமலர்ச்சிக்கான குரல் ஒலிக்கத் தொடங்கியது" - எனவும் "அலிகார் இயக்கத்தின் வழியாக இஸ்லாம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது" எனவும் குறிப்பிட்டவர்?

A) வி.டி.சாவர்க்கர்
B) லால் சந்த்
C) சர்வப்பள்ளி கோபால்
D) ராமச்சந்திர குஹா

115) அனைத்திந்திய முஸ்லிம் லீகின் முதல் தலைவர் யார்?

A) சர் சயது அகமது கான் B) ஆகாகான்

C) முகமது அலி ஜின்னா D) கவிஞர் இக்பால்

116) இந்து மகா சபை தன்னுடையப் பிரச்சாரத்தை புதுப்பிக்க காரணமான, 1921இல் நடைபெற்ற நிகழ்வு எது?

A) கோல் கிளர்ச்சி B) சாந்தலர்கள் கிளர்ச்சி

C) கேதா விவசாயிகள் போராட்டம் D) மலபார் கிளர்ச்சி

117) 1946இல் டெல்லி வந்த 3 பேர் கொண்ட அமைச்சரவை தூதுக்குழுவில், குழுவின் திட்ட வரைவு தயாரிப்பில் முக்கிய பங்காற்றியவர் யார்?

A) கிரிப்ஸ் B) பெதிக் லாரன்ஸ்

C) வில்லியம் ஹென்றி D) A.V. அலெக்ஸாண்டர்

118) மத்தியபுலனாய்வுத் துறையானது, எந்தக் கமிட்டியின் பரிந்துறையின் மூலம் உருவாக்கப்பட்டது?

A) எஸ். வேணுகோபால் கமிட்டி B) நீதிபதி ராஜன் கமிட்டி

C) சந்தாணம் கமிட்டி D) எல்.எம்.சிங்வி கமிட்டி

119) லோக்பால் (பொருள்: மக்கள் காவலன்) என்ற வார்த்தையை 1963 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியவர் யார்?

A) அச்சுத மேனன் B) சந்தாணம் C) அஷோக் மேத்தா D) L.M. சிங்வி

120) ஊழல் செயலில் ஈடுபடும் பொது ஊழியருக்கு, லோக்பாலால் எத்தனை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது?

A) 2 B) 4 C) 5 D) 7

121) முதன் முதலாக 1970இல் லோக் ஆயுக்தா சட்டத்தை இயற்றிய மாநிலம் மற்றும் லோக் ஆயுக்தா அமைப்பை முதன் முதலில் (1971) உருவாக்கிய மாநிலம் முறையே?

A) அஸ்ஸாம் & மகாராஷ்டிரம் B) ராஜஸ்தான் & ஒடிசா

C) ஒடிசா & மகாராஷ்டிரம் D) மகாராஷ்டிரம் & ஒடிசா

122) தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட _____ இன் பண மதிப்பாகும்

A) மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் B) நிகர பண்டங்கள் மற்றும் பணிகளின்

C) A & B D) நிகர தேசிய உற்பத்தி

123) உற்பத்தி முறையில், ஒரு துறையின் வெளியீடு(Output) மற்றொரு துறையின் உள்ளீடு (Input) ஆகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இரு முறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதற்கு _____ என்று பெயர்.

A) ஒருமுறைக் கணக்கிடல் B) இருமுறை கணக்கிடல்

C) பிழையாகக் கணக்கிடல் D) முடிவற்று கணக்கிடுதல்

124) ஓராண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) தலா வருமானம் B) தனிநபர் வருமானம்

C) தேசிய வருமானம் D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**125)** வ.உ.சிதம்பரனாரின் 150-வது பிறந்ததினத்தை ஒட்டி எந்த இரு இடங்களில் அவருக்கு புதிதாக சிலை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது?

A) சென்னை & கோவை
B) சென்னை & தூத்துக்குடி
C) கோவை & தூத்துக்குடி
D) தூத்துக்குடி & மதுரை

**126)** பொருந்தா இணை எது?

A) அயோடின் - காய்ட்டர்
B) புளூரின் - பற்களில் கறை
C) மக்னீசியம் - நரம்பு செயலிழப்பு
D) புரதம் - ஸ்கர்வி

**127)** வேதம் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) எல்லையில்லா கருணை
B) முடிவில்லா வெளி
C) அறிவுக் களஞ்சியம்
D) வேத விற்பன்னம்

**128)** காயத்திரி மந்திரம் இடம்பெற்றுள்ள வேதம் எது?

A) ரிக்
B) யஜூர்
C) சாமம்
D) அதர்வணம்

**129)** மகாபாரதத்தை மையமாகக் கொண்டு வியாசர் விருந்து என்ற நூலை எழுதியவர் யார்?

A) கல்கி கிருஷ்ணமூர்த்தி
B) சுப்ரமண்ய சிவா
C) இராஜகோபாலாச்சாரி
D) பாரதியார்

**130)** தவறான இணை எது?

A) சிவபுராணம் - எட்டு
B) விஷ்ணு புராணம் - நான்கு
C) பிரம்ம புராணம் - இரண்டு
D) அக்னி மற்றும் சூரியன் - தலா ஒரு புராணம்

**131)** கம்யூனிச இயக்கத்தை அடக்குவதற்காக, M.N. ராய், S.A. டாங்கே, முசாஃபர் அஹமது, M. சிங்காரவேலர் ஆகிய தலைவர்கள் எந்த சதித்திட்ட வழக்கில் விசாரிக்கப்பட்டனர்?

A) கான்பூர் சதித்திட்ட வழக்கு
B) லாகூர் சதித்திட்ட வழக்கு
C) மீரட் சதித்திட்ட வழக்கு
D) பெஷாவர் சதித்திட்ட வழக்கு

**132)** இந்திய பொதுவுடைமைக் கட்சியை முறையாக ஆரம்பிக்கும் முயற்சியாக 1925 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய பொதுவுடைமை மாநாட்டில் தலைமை உரையாற்றியவர் யார்?

A) எம்.என். ராய்
B) S.A. டாங்கே
C) சிங்காரவேலர்
D) முசாஃபர் அகமது

**133)** தாராசுரம் - ஐராவதேஸ்வரர் கோயில் பின்வரும் எந்த கலைப்பாணியை உள்ளடக்கியுள்ளது?

A) நாகரம்
B) திராவிடம்
C) வேசரம்
D) இவையனைத்தும்

**134)** இரண்டாம் புலிகேசியின் அவையிலிருந்த எந்த அறிஞர் சமண சமயத்தை பின்பற்றினார்?

A) நாகசந்திரர்
B) ரவி கீர்த்தி
C) நேசமித்திரர்
D) கத்தியானர்

ETW ACADEMY

**135)** பாண்டியர்கள் காலத்தில் அந்தணர்கள் நடத்திய பாடசாலைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

A) கடிகை & எண்ணாயிரம் B) வித்யாஸ்தானம் & திருபுவனம்

C) கடிகை & வித்யாஸ்தானம் D) திருபுவனம் & எண்ணாயிரம்

**136)** "இலண்டன் பிரிவி கவுன்சிலிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?

A) சர் சயது அகமது கான் B) முகமது அலி ஜின்னா

C) சயது அமீர் அலி D) தாதாபாய் நவ்ரோஜி

**137)** கணபதி விழா மூலம் இந்துக்களை திரட்டுவதற்கு முயற்சித்தவர் யார்?

A) திலகர் B) அரவிந்தகோஷ்

C) லாலா லஜபதி ராய் D) கோபாலகிருஷ்ண கோகலே

**138)** முஸ்லிம்களின் தனி அரசியல் அடையாளத்திற்கான அலுவல் முத்திரையை முஸ்லிம் லீக்கிற்கு வழங்கிய ஒப்பந்தம் எது?

A) லாகூர் ஒப்பந்தம் B) லக்னோ ஒப்பந்தம் C) பம்பாய் ஒப்பந்தம் D) பூனா ஒப்பந்தம்

**139)** 1924இல் பஞ்சாப் மாகாணத்தை இந்து, முஸ்லிம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென வெளிப்படையாகக் கூறியவர் யார்?

A) கோபாலகிருஷ்ண கோகலே B) பால கங்காதர திலகர்

C) லாலா லஜபதி ராய் D) பிபின் சந்திர பால்

**140)** காங்கிரஸ் ஆட்சி முடிவடைந்ததை மீட்பு நாளாக முஸ்லீம் லீக் கொண்டாடிய நாள் எது?

A) 1939 டிசம்பர் 22 B) 1940 ஜனவரி 22

C) 1940 மார்ச் 22 D) 1939 அக்டோபர் 22

**141)** பெதிக் லாரன்ஸ் தலைமையிலான தூதுக்குழு பரிந்துரைத்த திட்டம் என்ன?

A) ஓரடுக்கு கூட்டாட்சி முறை B) ஈரடுக்கு கூட்டாட்சி முறை

C) மூன்றடுக்கு கூட்டாட்சி முறை D) நான்கடுக்கு கூட்டாட்சி முறை

**142)** மத்திய புலனாய்வுத்துறை தேர்வுக்குழு தலைவர் யார்?

A) பிரதமர் B) குடியரசுத்தலைவர்

C) மக்களவை எதிர்கட்சித்தலைவர் D) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

**143)** மத்திய கண்காணிப்பு ஆணையர்களின் பதவிக்காலம் என்ன?

A) 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

B) 4 ஆண்டுகள் அல்லது 68 வயது வரை

C) 5 ஆண்டுகள் அல்லது 68 வயது வரை

D) 4 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

**144)** சென்னையில் முதன் முதலில் லோக் அதாலத் நடைபெற்ற ஆண்டு என்ன?

A) 1982 B) 1986 C) 1988 D) 1984

145) பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் கூட்டப்பட்ட மதிப்பு மூலமாக தேசிய வருவாயை கணக்கிடும் முறை எது?

A) உற்பத்தி முறை B) காரணி வருவாய் முறை

C) செலவு கூட்டு மூறை D) மேற்கண்ட அனைத்தும்

146) லாபம், வட்டி, லாப ஈவு மற்றும் ராயல்டி ஆகியவை?

A) உழைப்பாளர் வருமானம் B) மூலதன வருமானம்

C) கலப்பு வருமானம் D) தனிநபர் வருமானம்

147) **கூற்று:** இந்தியாவில், ஒரு சரியான தேசிய வருமானத்தை மதிப்பீடு செய்வதில் எந்த சிரமமும் இல்லை

**காரணம்:** இந்தியா ஒரு ஒழுங்குபடுத்தப்படாத, அன்றாட பிழைப்பை நடத்தும் சிறு தொழில்களையும் பண்ட மாற்று அங்காடிகளையும் உள்ளடக்கிய நாடு.

A) கூற்றும் காரணமும் சரி B) கூற்று சரி; காரணம் தவறு

C) கூற்று தவறு; காரணம் சரி D) கூற்றும் காரணமும் தவறு

148) தனிநபர் வருமானத்தில் இருந்து நேர்முக வரிகளை கழித்தால் கிடைப்பது எது?

A) தலா வருமானம் B) ஆண்டு நிகர வருமானம்

C) செலவிடக் கூடிய வருமானம் D) நிகர வருமானம்

149) தலா வருமானம் = ?

A) தேசிய வருமானம் * மக்கள் தொகை B) தேசிய வருமானம் / மக்கள் தொகை

C) தேசிய வருமானம் + மக்கள் தொகை D) தேசிய வருமானம்(மக்கள் தொகை)

150) லோக்பால் நடைமுறைக்கு வந்த நாள் எது?

A) ஜனவரி 16, 2014 B) டிசம்பர் 18, 2013 C) ஜனவரி 1, 2014 D) டிசம்பர் 17, 2013

151) லோக்பால் அமைப்பில் எத்தனை சதவீதத்தினர் பட்டியல் வகுப்பினர், சிறுபான்மையினர் மற்றும் பெண்களில் இருந்து தேர்வுசெய்யப்படுவர்?

A) 50 % B) 33 % C) 60 % D) 25 %

152) லோக்பாலின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் படிகள் எப்பதவிக்கு இணையாக இருக்கும்?

A) மக்களவை சபாநாயகர் B) மாநிலங்களவை தலைவர்

C) உச்சநீதிமன்ற நீதிபதி D) இந்திய குடிமைப் பணியாளர்

153) நியூசிலாந்தில் OMBUSDSMAN அமைப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) பாராளுமன்ற விசாரணை கமிஷனர் B) ஒருங்கிணைந்த விசாரணைகள் ஆணையம்

C) ஒருங்கிணைந்த விசாரணை கமிஷன் D) ஏதுமில்லை

154) சந்தானம் குழுவின் பரிந்துரையின்படி லஞ்ச ஒழிப்பு கமிஷனை தமிழ்நாடு அரசு ஏற்படுத்திய ஆண்டு என்ன?

A) 1964 B) 1965 C) 1966 D) 1967

155) ஆதிசங்கரர், இராமானுஜர் ஆகியோரின் தத்துவங்களை இன்றளவும் லட்சக்கணக்கான மக்கள் போற்றுவதற்கு அவை உபநிடதக் கருத்துகளைக் கொண்டிருப்பதே காரணம் என்று கூறுபவர் யார்?

A) ஷோபன்ஹோவர் B) அல்பெருனி C) அமுர்-டி-ரின் கோர்ட் D) வின்டர்நீட்ஸ்

156) கல்ப சூத்திரம் என்னும் நூலை எழுதிய சமணத்துறவி யார்?

A) ரிஷபர் B) பத்ரபாகு C) கோமதீஸ்வரர் D) வர்த்தமானர்

157) பொருத்துக:

(i) சைவம் - 1. விஷ்ணு
(ii) வைணவம் - 2. சிவன்
(iii) காணபத்தியம் - 3. சூரியன்
(iv) கௌமாரம் - 4. சக்தி
(v) சாக்தம் - 5. கணபதி
(vi) சௌரம் - 6. முருகன்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) |
|---|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 6 | 1 |
| B) | 2 | 1 | 5 | 6 | 4 | 3 |
| C) | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| D) | 5 | 6 | 4 | 3 | 2 | 1 |

158) இப்போது நமது மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி லோக் ஆயுக்தா பரிந்துரைக்கிறது எனில் அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுப்பவர் யார்?

A) திரு ரவி B) திரு மு.க.ஸ்டாலின்
C) திரு. அப்பாவு D) முனைவர் வே.இறையன்பு

159) தவறான இணை எது?

A) பணமோசடித் தடுப்புச் சட்டம் - 2002
B) பினாமி பரிவர்த்தனைகள் தடுப்புச் சட்டம் – 1990
C) ஊழல் தடுப்புச் சட்டம் - 1988
D) நீதித்துறை பொறுப்புடைமை மசோதா - 2010

160) அயோத்திதாசப் பண்டிதருக்கு எங்கு மணிமண்டபம் அமைக்கப்பட உள்ளது?

A) தென்சென்னை B) மத்தியசென்னை
C) வடசென்னை D) தென் தமிழகம்

161) தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேட இந்தியாவின் பிறமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் பல இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அவற்றுள் கர்நாடகாவின் எப்பகுதியில் ஆய்வு நடைபெற உள்ளது?

A) வெங்கி B) தலைக்காடு
C) பாலூர் D) பட்டணம்

ETW ACADEMY

162) பாரதியார் பிறந்த நாளான செப்டம்பர் 11 மகாக்கவிநாளாகக் கொண்டாடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் எவ்விருது வழங்கப்பட உள்ளது?

A) மகாக்கவி பாரதி விருது B) பாரதி கவிஞர் விருது

C) பாரது இளம் கவிஞர் விருது D) மகாக்கவி பாரதி கவி விருது

163) பௌத்த சமய அறிஞர் வசுபந்து அவர்களை ஆதரித்த குப்த அரசர் யார்?

A) முதலாம் சமுத்திரகுப்தர் B) இரண்டாம் சமுத்திரகுப்தர்

C) முதலாம் குமாரகுப்தர் D) இரண்டாம் சந்திரகுப்தர்

164) சோழப்பேரரசின் அரசவையில் இடம்பெற்றிருந்த அதிகாரிகள் மற்றும் அவர்களின் பெயர்களை பொருத்துக:

(i) திருவாய் கேள்வி - 1. அரசனின் ஆணைகளை வெளியிடுபவர்

(ii) திருமந்திர ஓலை நாயகம் - 2. அரசின் ஆணைகளை ஓலையில் எழுதுபவர்

(iii) கருமவிதிகள் - 3. ஆணைகளை நாட்டின் பல இடங்களுக்குக் கொண்டு செல்பவர்.

(iv) புரவுவரி திணைக் களத்தார் - 4. நிலவரிக் கழகம்

(v) வரிப்பொத்தகக் கணக்கு - 5. தணிக்கை அதிகாரி

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 5 | 4 | 3 | 2 | 1 |
| C) | 3 | 2 | 1 | 5 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 | 5 |

165) புத்த சமய மாநாடுகளையும் அவற்றிற்கு தலைமை ஏற்றவரையும் பொருத்துக:

(i) முதல் மாநாடு - 1. வசுமித்திரர்

(ii) இரண்டாம் மாநாடு - 2. மகாகசபர்

(iii) மூன்றாம் மாநாடு - 3. சபாசமிகா

(iv) நான்காவது மாநாடு - 4. மெக்காலி புத்ததிசா

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 1 | 4 | 1 |

166) பௌத்த சமயமானது மகாயானம், ஹீனயானம் என்று இரு பிரிவுகளாக பின்வரும் எம்மாநாட்டில் பிரிந்தது?

A) முதல் பௌத்த மாநாடு B) இரண்டாம் பௌத்த மாநாடு

C) மூன்றாம் பௌத்த மாநாடு D) நான்காம் பௌத்த மாநாடு

167) வங்காளத்தில் சிட்டகாங் படைத்தளத்தில் தொடர்ச்சியான தாக்குதலை ஏற்பாடு செய்த இந்திய குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த புரட்சியாளர் யார்?

A) பகத்சிங் B) ராஜகுரு C) சுகதேவ் D) கல்பனா தத்

ETW ACADEMY

**168)** ‘அகில இந்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி’ எப்போது நிறுவப்பட்டது?

A) 1926 B) 1928 C) 1929 D) 1930

**169)** காலனி ஆட்சியை ஆயுதக்கிளர்ச்சி மூலம் அகற்றும் நோக்கில் 1924இல் இந்துஸ்தான் குடியரசு ராணுவம் (HRA) எங்கு உருவாக்கப்பட்டது?

A) மீரட் B) கல்கத்தா C) பம்பாய் D) கான்பூர்

**170)** 1930 ஏப்ரலில் சிட்டகாங் ஆயுதக்கிடங்கு மீதான தாக்குதலில் ஈடுபட்டவர்கள் யார்?

A) சூர்யா சென் மற்றும் அவரது நண்பர்கள் B) சுகதேவ் மற்றும் அவரது நண்பர்கள்

C) பகத்சிங் மற்றும் அவரது நண்பர்கள் D) இராஜகுரு மற்றும் அவரது நண்பர்கள்

**171)** இந்நோய் 1 வயதுக்கு குறைவான குழந்தைகளைத் தாக்கும். இந்நோய் தாக்குதலுக்கு உள்ளான குழையின் தலை பெரியதாகவும், கை கால்கள் மெலிந்து குச்சி போன்றும், மூளை வளர்ச்சி குன்றியும் காணப்படும்.

A) குவாஷியோர்கர் B) ரிக்கெட்ஸ் C) ஹீமோபிலியா D) மராஸ்மஸ்

**172)** கால்சியம் குறைபாட்டால் வரும் நோய்களில் சேராதது எது?

A) பற்சிதைவு B) ஆஸ்டியோமலேசியா C) அனீமியா D) ரிக்கெட்ஸ்

**173)** எவ்வைட்டமின் குறைபாட்டால் பெரிபெரி நோய் தாக்குகிறது?

A) வைட்டமின் பி1 B) வைட்டமின் பி2 C) வைட்டமின் பி5 D) வைட்டமின் பி6

**174)** கழிவுநீக்க மண்டலத்தின் அடிப்படை அலகு?

A) நியூரான் B) நெஃப்ரான்

C) சார்க்கோமியர் D) மேற்கண்ட எதுவுமில்லை

**175)** குயிலி மற்றும் உமையாள் ஆகியோரின் தற்போதைய வயது விகிதம் 5:4. ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு குயிலியின் வயது 27 எனில் உமையாளின் தற்போதைய வயது என்ன?

A) 16 B) 18 C) 14 D) 20

**176)** சுகதேவ் ராஜகுருவை விட 8 வயது இளையவர். அவர்களின் வயதுகளின் விகிதம் 7:9 எனில் சுகதேவின் வயது என்ன?

A) 36 B) 28 C) 38 D) 30

**177)** சிதம்பரம் என்பவர் சிவாவை விட 4 மடங்கு மூத்தவர். 15 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களின் வயதுகளின் கூடுதல் 65 எனில் அவர்களின் தற்போதைய வயது என்ன?

A) 30, 35 B) 7, 28 C) 9, 36 D) 8, 32

**178)** B மற்றும் B ஆகியோரின் வயதுகளின் விகிதம் 2:5. 8 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களின் வயதுகளின் விகிதம் 1:2 எனில் அவர்களின் வயதுகளின் வித்யாசம் என்ன?

A) 32 B) 28 C) 36 D) 24

**179)** P, Q & R ஆகியோரின் மொத்த வயது 75 ஆண்டுகள். 5 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களின் வயதுகளின் விகிதம் 3:5:7 எனில் R-இன் தற்போதைய வயது என்ன?

A) 36 B) 28 C) 24 D) 33

**180)** தந்தையின் வயது அவரது மகனின் வயதைப் போல் 5 மடங்கு. 5 வருடங்களுக்கு முன்பு தந்தையின் வயது மகனின் வயதைப் போல் 10 மடங்கு எனில் தற்போது தந்தையின் வயது என்ன?

A) 40 ஆண்டுகள் B) 50 ஆண்டுகள் C) 55 ஆண்டுகள் D) 45 ஆண்டுகள்

**181)** 3 மாத இடைவெளிகளில் பிறந்த 4 குழந்தைகளின் வயதுகளின் கூடுதல் 62 மாதங்கள் எனில் மிகச்சிறிய குழந்தையின் வயது என்ன?

A) 9 மாதங்கள் B) 7 மாதங்கள் C) 8 மாதங்கள் D) 11 மாதங்கள்

**182)** ஒரு நபர் தனது மகனை விட 30 வயது கூடுதல் வயதுடையவர். 2 ஆண்டுகளில் அவரின் வயது மகனின் வயதைப் போல இரு மடங்கு ஆகும் எனில், மகனின் தற்போதைய வயது என்ன?

A) 28 B) 30 C) 32 D) 36

**183)** தந்தை மற்றும் மகனின் வயதுகளின் விகிதம் 4:1. அவர்களின் வயதுகளின் பெருக்கற்பலன் 100 எனில் 5 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களின் வயதுகளின் விகிதம் என்ன?

A) 6:3 B) 5:3 C) 5:2 D) 6:2

**184)** A மற்றும் Bயின் மொத்த வயது B மற்றும் Cயின் மொத்த வயதை விட 14 ஆண்டுகள் அதிகம் எனில் Cயின் வயது Aயின் வயதை விட எவ்வளவு குறைவு?

A) 12 B) 14 C) 16 D) 18

**185)** இரு நபர்களின் வயது வித்தியாசம் 10 ஆண்டுகள். 15 ஆண்டுகளுக்கு முன்பு மூத்தவரின் வயது இளையவரை விட இரு மடங்கு எனில் மூத்தவரின் தற்போதைய வயது என்ன?

A) 35 B) 25 C) 30 D) 20

**186)** தந்தை மற்றும் மகனின் வயது விகிதம் 3:2. தந்தை மற்றும் தாயின் வயது விகிதம் 5:8. மொத்த வயதுகளின் கூடுதல் 98 எனில் தந்தையின் வயது என்ன?

A) 25 B) 30 C) 35 D) 40

**187)** தந்தை மற்றும் மகனின் தற்போதைய வயது கூடுதல் 60. 3 ஆண்டுகளுக்கு முன் தந்தையின் வயது மகனின் வயதைப் போல் 5 மடங்கு எனில் 6 ஆண்டுகளுக்குப் பிறகு மகனின் வயது என்ன?

A) 15 B) 19 C) 18 D) 16

**188)** A என்பவரின் வயது B-யை விட 2 ஆண்டுகள் அதிகம். B என்பவரின் வயது C-யை விட 2 மடங்கு அதிகம். A, B, C ஆகியோரின் வயதுகளின் கூடுதல் 32 எனில் B-யின் வயது என்ன?

A) 16 B) 14 C) 12 D) 10

**189)** ஆண்டுகளுக்கு முன்பு X மற்றும் Y யின் வயது விகிதம் 5:4. 3 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களின் வயதுகளின் விகிதம் 11:9 என ஆகிறது எனில் Yயின் தற்போதைய வயது என்ன?

A) 75 B) 87 C) 78 D) 65

**190)** 8 ஆண்டுகளுக்கு முன்பு ராஜன் திருமணம் செய்தார். அவரின் தற்போதைய வயது திருமணத்தின்போது இருந்த வயதில் 6/5 மடங்குகள். ராஜனின் சகோதரிக்கு ராஜனின் திருமனத்தின்போது அவரை விட 15 வயது குறைவு எனில் ராஜனின் சகோதரி வயது என்ன?

A) 23 B) 25 C) 28 D) 30

ETW ACADEMY

**191)** நான்கு வருடங்களுக்கு முன்பு கீதாவின் வயது சீதாவின் வயதில் 3இல் ஒரு பங்கு. தற்போது கீதாவின் வயது 15 எனில் சிதாவின் தற்போதைய வயது என்ன?

A) 37 B) 40 C) 43 D) 46

**192)** 10 ஆண்டுகளுக்கு முன்பு A யின் வயது B யின் வயதில் பாதி. அவர்களது தற்போதைய வயதுகளின் விகிதம் 3:4 எனில் அவர்களின் வயதுகளின் வித்தியாசம் என்ன?

A) 2 B) 5 C) 6 D) 8

**193)** தந்தை மற்றும் மகனின் வயதுகளின் கூடுதல் 45 ஆண்டுகள். 5 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களின் வயதுகளின் பெருக்கல் மதிப்பு 34 எனில் மகன் மற்றும் தந்தையின் மதிப்புகள் முறையே?

A) 5, 29 B) 4, 29 C) 5, 39 D) 6, 39

**194)** தந்தை மகனிடம் சொன்னார், "நீ பிறந்தபோது நான் உன்னுடைய இப்போதைய வயதில் இருந்தேன்". இப்போது தந்தையின் வயது 40 எனில் 5 ஆண்டுகளுக்கு முன்பு மகனின் வயது என்ன?

A) 20 B) 15 C) 18 D) 22

**195)** கங்காவின் தற்போதைய வயதிலிருந்து 6 ஆண்டுகள் கழிக்கப்பட்டு, மீதியை 15 ஆல் வகுத்தால் அனுாப்பின் வயது கிடைக்கும். அனுாப் மதனை விட 2 வயது குறைவு. மதனின் வயது 5 எனில் கங்காவின் தற்போதைய வயது என்ன?

A) 51 B) 61 C) 41 D) 31

**196)** P மற்றும் Q ஆகியோரின் தற்போதைய வயது விகிதம் 5:8. Qவின் தற்போதைய வயதிற்கும் 10 வருடங்களுக்குப் பிறகு உள்ள Pயின் வயதிற்கும் உள்ள வேறுபாடு 2 எனில் P மற்றும் Q வின் தற்போதைய வயதுகளின் கூட்டுத்தொகை?

A) 68 B) 62 C) 52 D) 58

**197)** மோகனின் வயது அவனது மகனின் வயதைக் காட்டிலும் 5 மடங்கு. 4 வருடங்களுக்குப் பிறகு இருவர் வயதுகளின் கூடுதல் 68 எனில் தற்போது மகனின் வயது?

A) 12 B) 10 C) 16 D) 14

**198)** ஜெகன் மற்றும் ராஜாவின் வயதுகளின் விகிதம் 3:2. மேலும் அவர்களின் வயது வித்யாசம் 12 எனில் ஜெகனின் வயது என்ன?

A) 30 B) 32 C) 34 D) 36

**199)** சிவாவின் தற்போதைய வயது 24. அவர் தன் தாயை விட 25 ஆண்டுகள் இளையவர் எனில் சிவாவின் தாயாரின் வயது என்ன?

A) 48 B) 45 C) 49 D) 50

**200)** "இலண்டன் பிரிவி கவுன்சிலிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?

A) சர் சயது அகமது கான் B) முகமது அலி ஜின்னா

C) சயது அமீர் அலி D) தாதாபாய் நவ்ரோஜி

***

© ETW Academy